
# <u>பத்திரிகைச் செய்தி வெளியீடு</u>

## <u>2015ம் ஆண்டுக்கான காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் செயலாற்றுகை</u>

**மொத்தக் காப்புறுதிக் கட்டுப்பணம் (GWP)**

இலங்கை காப்புறுதி கைத்தொழிற்துறை 2015ம் ஆண்டு நிலையான வளர்ச்சியைக் கொண்டிருந்தது. காப்புறுதி கைத்தொழிற்துறையில், நீண்ட கால காப்புறுதி வியாபாரம் மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் எனும் இரு துறைகளும் வளர்ச்சியைப் பதிவுசெய்திருந்தன


2015ம் ஆண்டு நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரங்கள் மொத்தக் காப்புறுதிக் கட்டுப்பண (GWP) வருமானமாக ரூபா 122,390 மில்லியனைப் பெற்றுக்கொண்டதுடன், இது 2014ம் ஆண்டு பெறப்பட்ட ரூபா 105,399 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 16.12% வீத வளர்ச்சியைப் பிரதிபலிக்கின்றது. பொதுக் காப்புறுதி வியாபாரம் காப்புறுதிக் கட்டுப்பண வருமானமாக ரூபா 68,815 மில்லியனை 2015ம் ஆண்டு (2014: ரூபா 60,803 மில்லியன்) பெற்றுக்கொண்ட போது, நீண்ட கால காப்புறுதி வியாபாரம் காப்புறுதிக் கட்டுப்பண வருமானமாக ரூபா 53,575 மில்லியனை (2014: ரூபா 44,596 மில்லியன்) பெற்றுக்கொண்டது. அத்துடன் நீண்ட கால காப்புறுதி வியாபாரம் மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் என்பன 2014ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2015ம் ஆண்டு முறையே 20.13% மற்றும் 13.18% வீத மொத்தக் காப்புறுதிக் கட்டுப்பண வருமான வளர்ச்சியினை வெளிப்படுத்தியுள்ளது.




**மொத்தச் சொத்துக்கள்**

காப்புறுதிக் கம்பனிகள் வைத்திருக்கும் சொத்துக்களின் பெறுமதி 31 டிசம்பர் 2015ம் திகதியில் ரூபா 464,944 மில்லியனாக இருந்ததுடன், இது 2014ம் ஆண்டு கம்பனிகள் வைத்திருந்த ரூபா 421,407 மில்லியன் சொத்துக்களுடன் ஒப்பிடுகையில் 10.33% வீத வளர்ச்சியைப் பிரதிபலிக்கின்றது. இதே வருடம் நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் சொத்துக்களின் பெறுமதி ரூபா 305,897 மில்லியனாக (2014: ரூபா 247,061 மில்லியன்) இருப்பதுடன், இது 23.81% எனும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காட்டுகின்றது. பொதுக்

காப்புறுதி வியாபாரத்தின் சொத்துக்களின் பெறுமதி ரூபா 157,001 மில்லியனாக (2014: ரூபா 173,964 மில்லியன்) இருந்ததுடன், இது 9.75% மறைவீத வளர்ச்சியினை வெளிப்படுத்தியுள்ளது.




**அரச பிணையங்களில் முதலீடு**

2015ம் ஆண்டின் இறுதியில், நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தின் மொத்த சொத்துக்களில் ரூபா 136,832 மில்லியனை அரச கடன் பிணையங்களில் முதலீடு செய்ததுடன், இது 44.73% வீதமாகும் (2014: ரூபா 111,153 மில்லியன்: 44.99%), அதேவேளை பொதுக் காப்புறுதி வியாபாரம் அதன் மொத்தச் சொத்துக்களில் ரூபா 38,042 மில்லியனை அரச கடன் பிணையங்களில் முதலீடு செய்ததுடன் இது 24.23% வீதமாகும் (2014: ரூபா 31,770 மில்லியன்: 18.26%). இதன்படி. நீண்ட கால காப்புறுதி வியாபாரம் மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரம் என்னும் இரண்டும் 31 டிசம்பர் 2015ம் திகதியில் மொத்தமாக ரூபா 174,874 மில்லியனை (2014: ரூபா 142,923 மில்லியன்) அரச கடன் பிணையங்களில் முதலீடு செய்துள்ளது.

**முரண்பாடுகளைத் தீர்த்தல் மற்றும் விசாரணைகள்**

இலங்கை காப்புறுதி சபையின் பிரதான குறிக்கோளான காப்புறுதி பூட்கையாளர்களைப் பாதுகாத்தல் என்பதற்கமைவாக, ஆயுள் மற்றும் பொதுக் காப்புறுதிக் கொள்கைகளின் கீழ் காப்புறுதி கோரிக்கைகள் தொடர்பாக எழுந்துள்ள காப்புறுதி பூட்கையாளர்களின் காப்புறுதிக் கோரிக்கைகள் மற்றும் முகவர்களின் தகைமைகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்கின்றது. சபைக்கு, 2015ம் ஆண்டு 266 புதிய முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றது. கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் 274 முறைப்பாடுகள் தீர்க்கப்பட்டது/ முடிவுறுத்தப்பட்டது. தீர்க்கப்பட்ட விடயங்களில் இலங்கை காப்புறுதிச் சபையின் தலையீடு காரணமாக 54 கோரிக்கைகள் காப்புறுதி முகவர்களினால் வழங்கப்பட்டது. 2015ம் ஆண்டு சபையின் தலையீடு காரணமாக தீர்க்கப்பட்ட கோரிக்கைகளின் மொத்தப் பெறுமதி அண்ணளவாக ரூபா 28.3 மில்லியன் ஆகும்.

**காப்புறுதியாளர்கள்**

31 டிசம்பர் 2015ம் திகதி செயற்பட்ட முப்பது (30) காப்புறுதிக் கம்பனிகளில் (காப்புறுதியாளர்கள்), பன்னிரெண்டு (12) கம்பனிகள் நீண்ட கால காப்புறுதி வியாபாரத்தை மட்டும் மேற்கொள்வதுடன், பதினைந்து (15) கம்பனிகள் பொது காப்புறுதி வியாபாரத்தை மட்டும் மேற்கொள்ளுகின்றன, அதேவேளை இதில் மூன்று (03) கம்பனிகள் இணைந்த கம்பனிகளாகும் (இவை பொது மற்றும் பன்னிரெண்டு கம்பனிகள் நீண்ட கால காப்புறுதி வியாபாரங்கள் எனும் இரண்டினையும் ஒருங்கே மேற்கொள்ளும் வியாபாரங்கள்). 2016ம் ஆண்டு இரு பொது காப்புறுதிக் கம்பனிகள் ஒன்று சேர்க்கப்பட்டதுடன், தற்போது 14 கம்பனிகள் பொதுக் காப்புறுதி வியாபாரத்தை மேற்கொள்ளுகின்றன.

**காப்புறுதித் தரகர்கள்**

2015ம் ஆண்டில், ஐம்பத்தினேமு (57) காப்புறுதித் தரகுக் கம்பனிகள் சந்தையில் செயற்பட்டன. சட்டத்தின் 82ம் பிரிவுக்கு அமைவாக காப்புறுதித் தரகு வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு காப்புறுதி தரகுக் கம்பனிகள் இலங்கை காப்புறுதிச் சபையில் பதிவுசெய்யப்படுதல் வேண்டும்.57 தரகுக் கம்பனிகளில், 39 கம்பனிகள் நீண்ட கால மற்றும் பொதுக் காப்புறுதி வியாபாரத்திற்கு பதிவுசெய்ததுடன், 18 கம்பனிகள் பொதுக் காப்புறுதி தரகு வியாபாரத்திற்கு மட்டும் பதிவினை மேற்கொண்டன.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், நீண்ட கால காப்புறுதி வியாபாரத்திற்கு காப்புறுதித் தரகர்களின் பங்களிப்பு போதுமானதாக இருக்கவில்லை. எனினும் பொது காப்புறுதி வியாபாரச் சந்தையில் இடைத்தரகர்களின் முக்கியத்துவத்தை பொது காப்புறுதி வியாபாரம் பெற்றுக்கொண்ட கட்டுப்பண வருமானம் காட்டுகின்றது. பொதுக் காப்புறுதி வியாபாரம் தொடர்பாக காப்புறுதி தரகுக் கம்பனிகள் ரூபா 16,124 மில்லியன் (2014: ரூபா 14,559 மில்லியன்) காப்புறுதிக் கட்டுப்பண வருமானத்தை உழைத்துக்கொண்டதுடன் நீண்ட காலக் காப்புறுதி வியாபாரம் தொடர்பாக இவை ரூபா 206 மில்லியன் (2014: ரூபா 158 மில்லியன்) காப்புறுதிக் கட்டுப்பண வருமானத்தைப் பெற்றுக்கொண்டன. 2015ம் ஆண்டு காப்புறுதித் தரகுக் கம்பனிகள் பொதுக் காப்புறுதி வியாபாரம் மற்றும் நீண்ட கால வியாபாரம் என்பவற்றின் ஊடாக ரூபா 16,330 மில்லியன் வருமானத்தை பெற்றுக்கொண்டதுடன், இதே வியாபாரம் தொடர்பாக கடந்த வருடம் ரூபா 14,717 மில்லியனை உழைத்துக்கொண்டுள்ளது. 2015ம் ஆண்டைக் கடந்த வருடமான 2014ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 10.96% வீத வளர்ச்சியினை காப்புறுதி தரகர் வியாபாரம் வெளிப்படுத்துகின்றது.

விரிவான பகுப்பாய்வினை கீழ்வரும் வெப்முகவரியின் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும்.
http://www.ibsl.gov.lk/images/ibsl_statistical_review_2015.pdf

குறிப்பு:

1. 2015 – ஏற்பாடுகளின் இலக்கங்கள்
2. 2014 – மீள்தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள் (*NITF)* தவிர்த்து)
3. இடைக்கால கொடுக்கல் வாங்கல்கள் நீக்கப்பட்டது. (அதாவது நீண்ட கால காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதிப் பகுதிகளுக்கிடையிலான பரிமாற்றம்)


## இலங்கை காப்புறுதி சபை

11வது மாடி, கிழக்கு கோபுரம்
உலக வர்த்தக மையம்
கொழும்பு 01.

| தொலைபேசி: 011 2396184 - 4 | தொலைநகல்: 0112396190 |
|---|---|
| இணையத்தளம்: www.ibsl.gov.lk | மின்னஞ்சல்: info@ibsl.gov.lk |


**13/07/2016**